எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். உங்கள் விடைகளை பாடநூலின் துணையுடன் சரி பாருங்கள்.

1) சரியான விடையினைத் தெரிந்து எழுதுக.

1.மகிழ்ச்சி என்பதற்கான ஒத்த கருத்துச்சொல் ,
1. துக்கம் 2. துயரம் 3. ஆனந்தம் 4. வேதனை

2. எளிது என்பதற்கான எதிர்க்கருத்துச்சொல் ,
1. கடினம் 2 இலகு 3. இன்மை 4. கனிவு

3. கோபம் என்றால் ,
1. சாத்திரம் 2. காத்திரம் 3. பாத்திரம் 4.ஆத்திரம்

4. அளவு கடந்த ஆசை என்பது பின்வருவனவற்றுள் எது?
1. பேராசை 2. விருப்பம் 3. வெறுப்பு 4. தேவை

5. நிறைய சொத்துகளை சேகரித்து வைத்திருப்பவன் ,
1. ஏழை 2. தொழிலாளி 3. நீதிபதி 4.பெருஞ்செல்வன்

(5 x 1= 5 புள்ளிகள்) (பக்கம் 8)

2) பின்வரும் வாக்கியங்களின் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

1. மாதவன் தன் நண்பனை ..... (அலைத்தான் / அளைத்தான் / அழைத்தான்)
2. சுகந்தினி நோயினால் உடல் ..... (இலைத்தாள்/இளைத்தாள் /இழைத்தாள்)
3. தன் காலிலே அடிபட்ட நாய் .....யினால் துடிதுடித்தது. (வலி / வளி / வழி)
4. முற்றமெங்கும் மரத்தின் ..... கீழே விழுந்து கிடந்தன. (இழைகள் / இளைகள் / இலைகள்)
5. பறவை தன் ..... தானியத்தைக் கொத்தியது. (அலகினால் / அளகினால் /அழகினால்)
6. ஒற்றன் ..... பார்க்கத் துணிந்தான். (உலவு / உளவு / உழவு)
7. பசித்தவருக்கு ..... வழங்குதல் நற்பழக்கமாகும் . (அன்னம் / அண்ணம்)
8. நாம் எப்போதும் ..... செய்ய வேண்டும். (அரம் / அறம்)
9. அருச்சுனன் வில்லிலிருந்து ..... புறப்பட்டது. (பானம் / பாணம்)
10. நீரூற்றுகள் பாயும் ..... அழகாகக் காட்சியளித்தது. (வரை / வறை)

(10x 1= 10 புள்ளிகள்) (பக்கம் 11,12)

www.ikedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

3) பின்வரும் வினாக்களுக்கு முழுவாக்கியங்களாக விடை எழுதுக.

1. செல்வந்தன் ஊர்மக்களை எவ்வாறு துன்புறுத்தினான் ?

2. ஈ.்பண்டி எவ்வாறு செல்வந்தனிடமிருந்து ஊர்மக்களைக் காப்பாற்றினான்?

3. இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது? (பக்கம் 5 – 8)

4. "எலியும் சேவலும்" கதைப்பாடலை எழுதியவர் யார்? (பக்கம் 21)

5. சேய் எலி தாய் எலியிடம் வெளியில் சென்றால் எவ்வாறெல்லாம் இருக்கப்போவதாகக் கூறியது? (பக்கம் 16)

6. "எலியும் சேவலும்" பாடத்திலிருந்து நீர் பெறும் படிப்பினை யாது? (பக்கம் 21)

7. "ஏமாந்த நாய்" என்ற கதையை எழுதியவர் யார்? (பக்கம் 25)

8. காகத்திடம் காணப்பட்ட நல்ல பழக்கம் ஒன்றைக் கூறுக. (பக்கம் 25)

9. "குலைப்பனது நடுங்கல்" என்றால் என்ன? (பக்கம் 30)

10. "காகளம்" என்பதன் பொருள் என்ன? (பக்கம் 30)

11. உறவு முறைக்கடிதம் யார் யாருக்கிடையில் எழுதப்படலாம் என்பதற்கு மூன்று உதாரணங்களைக் கூறுக.

12. முதன்முதலில் பார்க்கும் ஒத்திகைக்கு என்ன பெயர்? (பக்கம் 52)

13. ஆத்திகன் , நாத்திகன் என்ற சொற்களுக்கிடையிலான வேறுபாடு யாது? (பக்கம் 52)

14. " மொழித்திறப் பாடலில்" அழ.வள்ளியப்பா அவர்கள் வெவ்வேறு கருத்துகளைப் புலப்படுத்துவதற்கு கையாண்டுள்ள சொற்கள் எவை? (பக்கம் 57)

15. அணில் பிள்ளையின் முதுகில் மூன்று கோடுகள் எவ்வாறு வந்தன? (பக்கம் 60)

(15 x 2= 30 புள்ளிகள்)

4) கீழ் வருவன எவ்வகை சொற்றொடர்கள் என்பதைக்கூறுக.

1. வேகமாக நடந்தான் .....
2. அன்பு அம்மா .....
3. கவிதையெழுதுகிறாள் .....
4. நல்லதொரு புத்தகம் .....
5. ஆசையாகப் படித்தான் ..... (5 புள்ளிகள்) (பக்கம் 33)

5) பின்வரும் உதாரணத்தைக் கொண்டு அட்டவணையின் ஏனைய பகுதிகளை நிரப்புக.

சொல்	திணை	எண்	பால்	இடம்
எழுந்தான்	உயர்திணை	ஒருமை	ஆண்	படர்க்கை
படித்தனர்				
யாழினி				
பறவைகள்				
சென்றது				
ஆசிரியை				

(5 x 1= 5 புள்ளிகள்) (பக்கம் 33)

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

6) பின்வரும் அட்டவணையைப்பூர்த்தி செய்க.

வகை	எண்ணிக்கை	உதாரணம் (இருப்பின் மூன்று போதுமானது)
உயிரெழுத்துக்கள்		
குறில்		
நெடில்		
மெய்யெழுத்துக்கள்		
வல்லினம்		
மெல்லினம்		
இடையினம்		
உயிர்மெய்யெழுத்துக்கள்		
ஆய்த எழுத்து		
தமிழின் மொத்த எழுத்துக்கள்		

(10 புள்ளிகள்) (பக்கம் 27,28)

7) எழுவாய் , பயனிலை , செயப்படுபொருள் கொண்டமைந்த ஐந்து வாக்கியங்களை எழுதுக.

உதாரணம் : மாலினி உணவை உண்டாள்.

1……
2……
3……
4……
5……

(5 x 2= 10 புள்ளிகள்) (பக்கம் 37)

8) பின்வரும் கதையை 40 - 50 சொற்களில் நிறைவு செய்க.

அது ஓர் மலைப்பிரதேசம். ஓங்கி வளர்ந்த மரங்களும் பசும்புல் வெளியும் கொண்ட அழகான இடம். நகரத்திலே வாழ்ந்து வந்த விசாகனுக்கு அந்த இடத்திற்கு வந்ததில் , ஒரே சந்தோஷம். ஆங்காங்கே தாவியோடும் முயல்களில் ஒன்றை எப்படியாவது பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. புதரினருகே பஞ்சு போலிருந்த முயல் குட்டியொன்று அவன் கண்களில் பட்டது…….

(10 புள்ளிகள்) (பக்கம் 32)

9) பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை ஒன்றை எழுதுக.

1. நான் விரும்பும் பெரியார்
2. மூத்தோர் சொல் கேட்போம்
3. நாமும் சூழலும்
4. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

(15 புள்ளிகள்)

www.ikedu.lk